பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.லிட்.

மலர்: 15] சென்னை: தை 23 (6—2—68) செவ்வாய் ★ வெளியூர்: தை 24 (7-2—68) புதன் [இதழ்: 195

'மாஜி'களிடையே முரண்பாடு!

சேலம், பிப். 6—

"'இந்தி ஒழிந்தது' என்ற இரு சொற்களைத் தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றியது சாதாரண மான காரியமல்ல; இதற்காக நாம் பட்ட பாடுகள் எத்தனை! ஏற்ற துன்பங்கள் எத்தனை!

"ஆனால் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், 'எங்கே இருந்தது இந்தி, என்று கேட்கிறார்; 'இருந்த இந்தியை ஒழிக்கலாமா?' என்று தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் சி சுப்பிரமணியம் கேட்கிறார்! அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் முரண்பாடு இருக்கிறது! அவர்கள் கூறுவது கூற்று—கூத்தா என்பதுதான் நமக்குப் புரியவில்லை!"

---மு. கருணாநிதி

அந்தமானில் தி.மு.கழகத் தோழர்கள்மீது தடியடி

120 தி.மு.க. தொண்டர்கள் கைது

இந்திரா வருகையையொட்டி போலீசு கெடுபிடி

போர்ட்பிளேயர், பிப். 5—

தலைமையமைச்சர் இந்திராகாந்திக்கு அந்தமான் தி. மு. கழகத் தோழர்கள் கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

'இந்திரா காந்தியே திரும்பிப் போங்கள்' என்று தமிழில் அவர்கள் குரலெழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்திரா காந்தி தங்கியிருந்த அரசு மாளிகையை நோக்கி ஊர்வலமாகச் சென்ற கழகத் தோழர்களைக் கலைக்கப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

இது தொடர்பாக, 120 தி. மு. க. தோழர்களைப் போலீசார் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றனர்.

வேலை யிழந்த பொறியியல் வல்லுநர்

வேலைவாய்ப்பு கிடைக்க எஸ். டி. சோமசுந்தரம் வற்புறுத்தல்

சென்னை, பிப். 6—

நெய்வேலி நிலக்கரித் திட்டத்தில் பணியாற்றியபின் தற்போது வேலை இழந்துவிட்ட பொறியியல் வல்லுநர்களுக்கு மத்திய அரசின் நிறுவனங்களான கல்பாக்கம் அணு மின்நிலையம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஆகிய இடங்களில் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்தி நாடாளுமன்றக் கழக உறுப்பினர் திரு. எஸ். டி. சோமசுந்தரம், மத்திய உள்துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

வீரத்தைக் காட்டவேண்டிய இடம் வேறு!

சேலம், பிப். 6—

"சேலத்தில் நடத்திய ஊர்வலத்தின்போது, 'பிரிவினைச் சக்தியை முறியடிப்போம்—என்று காங்கிரசுக்காரர்கள் முழங்கியதாக அறிந்தேன்!

"நாங்கள் பிரிவினையை விட்டே நான்கு ஆண்டுகள் ஆகின்றன! இன்னும் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள்!

"இது எப்படியிருக்கிறது என்றால், அசல் வைச ஓட்டலில் நின்றுகொண்டு, 'புலால் உண்ணாதே' என்று கூறுவதுபோல இருக்கிறது!

"வீரம் இருந்தால்—விவேகம் இருந்தால், 'இந்தியைத் திணிப்பதால் நாடு பிளவுபடும்' என்று ஏன் கூறக்கூடாது?

"தனி நாடு கிளர்ச்சி நடைபெறும் நாகாலாந்திலும் அசாமிலும் சென்று இவர்கள் வீர முழக்கமிட்டிருந்தால் நாம்கூட இவர்களைப் பாராட்டியிருக்கலாம்!"

--மு. கருணாநிதி

தமிழகத் தீர்மானத்தின்மீது டெல்லி நடவடிக்கை!

வெளிப்படையாக விவாதிப்பதற்கில்லையாம்

மொரார்ஜி தேசாய் வெளியிட்ட தகவல்

ஆமதாபாத், பிப். 5—

தமிழகப் பள்ளிகளில் இந்தியை அறவே ஒழித்து, தமிழகச் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது குறித்து, இந்தியத் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் இப்போது வாய்திறந்திருக்கிறார்!

தமிழகச் சட்டமன்றத்தின் தீர்மானம் நாட்டு நலனுக்கு உகந்ததல்லவாம்! எனவே, நிலைமையைச் சமாளிக்க என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதை மத்திய அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறதாம்.

இத்தகவலை, இங்கு நடந்த சட்டமன்றக் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் வெளியிட்ட மொரார்ஜி தேசாய், 'இது பற்றி வெளிப்படையாக விவாதிப்பதற்கில்லை' என்றும் கூறியிருக்கிறார்.

இந்தி வெறியரின் தமிழ் நாட்டுப் பேச்சு!

காஞ்சி, பிப். 6—

"பல்லாண்டுக் காலமாகத் தென்னகம்தான் பல துறைகளிலும் வழிகாட்டியாக இருந்துவருகிறது! தமிழ்நாட்டுப் பெரியவர்கள்தான் சமுதாயத்தை நல்வழிக்கு அழைத்துச் சென்றார்கள்!

"அப்படிப்பட்ட தமிழ்நாட்டில் இன்று மொழிச் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

"இந்தி பேசாத பகுதி மக்கள் மீது இந்தியைத் திணிப்பது கூடாது; அந்தப் பகுதிகளில் அவரவர் தாய்மொழியுடன் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தையும் கற்பதை யாரும் தடுக்கக்கூடாது!"

---மது லிமாயி

(சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர்)

இதுவரை யாருக்கோ பயன்பட்ட கூட்டுறவுத்துறை!

இனி ஏழைகளுக்கே பயன்பட வகைசெய்வோம்!

காஞ்சிபுரம், பிப். 6—

'நமது நாட்டில் கூட்டுறவுத்துறை சிறந்த முறையில் பணியாற்றுகிறது; எனினும், முழுவதுமாக வெற்றிபெற்றது என்பதை என்னால் ஒத்துக்கொள்ள முடியாது.

"எந்த ஏழை மக்களுக்காகக் கூட்டுறவுத்துறை துவக்கப்பட்டதோ அந்த மக்களுக்குக் கூட்டுறவுத் துறையினால் அதிக பலன் கிடைக்கவில்லை! ஆகவே, அந்த ஏழை மக்களுக்குப் பயன் கிடைக்கும்வகையில் கூட்டுறவுத்துறை சீர்திருத்தப்பட வேண்டும்; இது தொடர்பாக, சட்ட திட்டங்களை மாற்றியமைத்துப் பணியாற்ற விரும்புகிறோம்; அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுகிறோம்.

"சமுதாய மறுமலர்ச்சியே கூட்டுறவு முறையில்தான் ஏற்பட்டாக வேண்டும்; இன்றில்லாவிடினும் என்றாவது ஒருநாள் இந்தச் சமுதாயம், முழுமையடைந்த கூட்டுறவு முறையில்தான் இயங்கப்போகிறது. அதற்கேற்ற முறையில் கூட்டுறவு அமைப்புகளை இப்போதிருந்தே நாம் சீர்திருத்தியாக வேண்டும்.

"'எல்லோருக்குமாக ஒருவர்; ஒருவருக்காக எல்லோரும்' என்ற சீரிய நோக்கில் கூட்டுறவுத்துறை இயங்குவது அவசியம். 'கூட்டுறவுத்துறை யாரோ சிலரிடம் இருக்கிறது' என்ற எண்ணத்தை மாற்றிட வேண்டும்."

---அமைச்சர் செ. மாதவன்

(பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு பாங்கிக் கட்டடத் திறப்பு விழாவில்)

ஆடம்பரச் செலவுக்கு ஆயிரம் கோடி!

காஞ்சிபுரம், பிப். 6—

"காங்கிரசு ஆட்சியில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது. 25 ஆயிரம் பொறியியல் நிபுணர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள்!

"ஆயிரம் கோடி ரூபாய் சுங்க வரியின் மூலம் டெல்லி அரசுக்குக் கிடைக்கிறது. அந்தப் பணத்தையெல்லாம் டெல்லி அரசு ஆடம்பரத்துக்காகவும் சுய விளம்பரத்துக்காகவும் செலவிடுகிறது!"

--மது லிமாயி

(சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர்)

காங்கிரசு ஆட்சியில் துப்பாக்கிக்கு ஓய்வில்லை!

அதிக உணவு கோரி ஆர்ப்பாட்டம் செய்தவர்களைச் சுட்டனர்

பெங்களூருக்கு வடக்கே 30-கல் தொலைவில் உள்ள டோட்பல்லப்பூர் என்னுமிடத்தில், உணவுப் பங்கீட்டு அளவை அதிகரிக்கக் கோரி, தாலுகா அலுவலகத்தின் எதிரே ஆர்ப்பாட்டம் செய்த 5,000-பேர் அடங்கிய கூட்டத்தைக் கலைக்கப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 5-பேர் காயமடைந்தனர். முதலில் தடியடிப்பிரயோகம் செய்தனர்; அதன்பிறகு துப்பாக்கியால் சுட்டிருக்கின்றனர். இந்த ஊரில் போலீசுத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரத்தில்

சுடப்பை மாவட்டத்தில் உள்ள கொண்டகலாவதா என்கிற கிராமத்தில் இரு கோஷ்டிகளிடையே எழுந்த பயங்கரமான ஆயுதத் தாக்குதலின் விளைவாகப் போலீசு தலையிட்டுத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது; இதில் கிராமவாசி ஒருவர் படுகாயமடைந்தார்.

இதுபோலவே அந்தக் கிராமத்துக்குப் பக்கத்திலிருந்த வட்டிரல்லி என்கிற கிராமத்திலும் கலகம் செய்தவர்களை விரட்டப் போலீசு துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

மேற்கு வங்கத்தில்

அவுரா மாவட்டத்தைச் சேர்ந்த நிஷிந்தா எனும் கிராமத்திற்கு அருகில் கட்டுக்கடங்காத கூட்டத்தின் மீது சுட்டதால் ஒருவர் மாண்டார்; மற்றொருவர் பலத்த காயமடைந்தார்; அவருடைய நிலைமை கவலைக்கிடமாயிருக்கிறது.

நிஷிந்தா வட்டார வளர்ச்சி அலுவலகத்துக்குமுன்பு இரண்டாயிரம்பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர்; கலைய மறுத்த கூட்டத்தினர்மீது போலீசு சுட்டது.

சுப்பிரமணியத்தின் சுயரூபம் பாரீர்!

"இந்திதான் இந்தியாவின் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும்; சுதந்தரத்தை விரும்பாதவர்கள்தான் இந்தியை வெறுப்பவர்கள்.

"ஆங்கிலமும் தாய் மொழியும் தான் இருக்கவேண்டும் என்பது, பிரிவினை உணர்ச்சியைத் தூண்டுவதாகும்!

"நாடாளுமன்றத்திற்கும், இராணுவத்திற்கும் இந்தி அவசியமாகும்!"

---சி. சுப்பிரமணியம்

(கோபி காங்கிரசு ஊழியர்கள் கூட்டத்தில்)

கல்வி நிலையங்களில் தமிழக மாணவர்கள்

உயிர்நீத்த மாணவர்கட்கு இரங்கல்

சென்னை, பிப். 5—

கடந்த சனவரி 12-ந்தேதிமுதல் தமிழக அரசின் உத்தரவின் பேரில் மூடப்பட்ட கல்லூரிகளும் பள்ளிக்கூடங்களும் இன்று திறக்கப்பட்டன.

சென்னை நகரிலும், மற்றும் மாநிலத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் உள்ள மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும்பினர்.

அண்மையில் ஆந்திரம், மைசூர் ஆகிய மாநிலங்களில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த மாணவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கின்ற வகையில் பல்வேறு இடங்களிலுள்ள மாணவர்கள் கறுப்புச் சின்னம் அணிந்து கல்விக்கூடங்களுக்குச் சென்றனர்.

பயனுள்ள பணிகட்குக் கடன் எழுப்ப மாநகராட்சிக்கு உரிமை

தமிழக அரசு அனுமதி

நோக்கத்தைப் பொதுமக்களிடம் தெளிவுடன் கூறுமாறு முதலமைச்சர் அண்ணு அறிவுரை

சென்னை, பிப். 6—

"தன்னுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்குப் போதுமான நிதி வசதி சென்னை மாநாகராட்சிக்கு இல்லையாதலால், இந்த ஆண்டிலிருந்து பொதுமக்களிடத்தில் நல்ல காரியங்களுக்குக் கடன் எழுப்ப உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

"சில ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த தலைமையமைச்சர் பண்டித நேரு அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள்; முன்பு இருந்த அரசு அந்த அதிகாரத்தை மாநகராட்சிக்குத் தரவில்லை; நாங்கள் அந்த அதிகாரத்தைத் தந்திருக்கிறோம்; இந்த ஆண்டிலிருந்து ஒரு கோடி ரூபாய் வரை கடன் எழுப்பிக் கொள்ள உரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. அப்படிக் கடன் எழுப்புகிற நேரத்தில் அதனுடைய நோக்கத்தைப் பொதுமக்களிடத்தில் நல்லமுறையில் நகராட்சி உறுப்பினர்கள் எடுத்துச்சொல்ல வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் சென்னை 58-வது வட்டத்தில் மாநகராட்சியின் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

நிதி நிலை மட்டும் சீராக அமைந்திருக்குமானுல்.....

"திறமையாகப் பணியாற்றுகின்ற நம்முடைய தோழர்கள் மாநகராட்சி உறுப்பினர்களாக இருப்பதால்தான் பல நல்ல காரியங்களைச் செய்துவருகிருர்கள்.

நம்முடைய மாநகராட்சியின் நிதி நிலை மட்டும் இன்னும் சீரான முறையில் அமைந்திருக்குமானுல், வசதிகள் அதிகரிக்கும்படியான திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியிருப்பார்கள்.

தேவைகள் அதிகரிக்கின்றன-- வருவாய்க்கு வழியுண்டா ?

தேவைகள் நாளுக்குநாள் வளருகின்றன; தேவைகள் வளருகின்ற அளவுக்கு வருவாய் வளர வழியில்லை. எத்தனைத் திட்டங்கள நிறைவேற்றப்பட்டாலும் ஆற்ற வேண்டிய பணிகள் மிகுதியாக இருக்கின்றன.

சென்னை மாநகராட்சி மன்றம், உதவிக்காக மாநில அரசை அணுகுகின்ற நேரத்தில், மாநில அரசு தன்னுலான அளவுக்கு உதவி செய்துகொண்டிருக்கிறது.

மாநில அரசு எந்த அளவுக்கு உதவி செய்தாலும், மாநகராட்சியின் தேவைகள் நிறைவேற்றத் தக்க சூழ்நிலை ஏற்படவில்லை; அதை எண்ணித்தான், 'வசதியுள்ளவர்கள் நிதியுதவி செய்ய வேண்டும்' என்று நம்முடைய உணவு அமைச்சர் மதியழகன் கூறினுர்.

அயல்நாட்டினர் சொல்வதை நாம் உணர வேண்டாமா ?

1947-ல் 33 கோடியாக இருந்த மக்கள் தொகை இன்று 50 கோடியாக ஆகியிருக்கிறது; ஆனல் அந்த அளவுக்கு வசதிகள் பெருகவில்லை. குழந்தைச் செல்வம் மட்டும் வளர்ந்திருக்கிறது!

நம்முடைய நாட்டுக்கு உதவி வேண்டுமென்று அயல்நாடுகளிடத்தில் கேட்கின்ற நேரத்தில் அவர்கள், 'மக்கள் தொகை வளர்ந்தால், நீங்கள் எவ்வளவு வசதியைப் பெருக்கிக்கொண்டாலும் அது போதுமானதாக இருக்காது; ஆகையால், கட்டாயக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் வெற்றிபெற வேண்டும்' என்று எடுத்துச்சொல்கிருர்கள்.

செய்ய வேண்டியவைகள் நினைவுக்கு வருகின்றன !

தாய்மார்கள் வேலைக்குச் செல்கின்ற நேரத்தில் அவர்களுடைய குழந்தைகளை, தக்க முறையில் பராமரிப்பதற்கு இந்த நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் சென்னையில், இப்படிப்பட்ட நிலையம் ஆறு இடங்களில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது.

சென்னையில் உள்ள 22 இலட்சம் மக்களில் 5 இலட்சம் பேர் வேலைக்குச் செல்ல வேண்டிய எளிய நிலையில் இருப்பவர்கள்; இதைப்போல இன்னும் நூற்றுக் கணக்கான விடுதிகள் இருந்தால்தான் தேவை நிறைவு பெறும். செய்து முடித்த காரியங்களைப் பார்க்கிறபோது இன்னும் செய்ய வேண்டிய காரியங்கள்தான் நினைவுக்கு வருகின்றன.

திருமண மண்டபம் கட்ட !

இங்கே திருமண மண்டபம் கட்ட முடியவில்லை—அதற்கு இடம் கிடைக்கவில்லை—என்று நண்பர் சிட்டிபாபு கூறினுர்.

ஒரு மாடி கட்டடம் உள்ளவர்கள் அதற்கு மேலே கட்டடம் கட்டவோ, வாடகைக்கு விடவோ மாநகராட்சிக்கு உரிமை அளித்தால் திருமண மண்டபத்தைக் கட்ட முடியும்.

பம்பாய் நகரம் ஒரு தீவுபோல இருப்பதால் அருகே இடநெருக்கடி அதிகமாக இருக்கிறது; எனவே, ஏழு — எட்டு அடுக்காக மாடிகளைக் கட்டிக் கொண்டே போகிருர்கள். 'அத்தனையும் ஒருவருக்கே சொந்தமா' என்று கேட்டால், இல்லை; முதல் அடுக்கு ஒருவருக்குச் சொந்தம்—இரண்டாவது அடுக்கு இன்னெருவருக்குச் சொந்தம்—இப்படி ஒவ்வொரு அடுக்கும் ஒவ்வொருவருக்குச் சொந்தம்.

தேவை அதிகமிருப்பதால், நாமும் அப்படிக் கட்டினுல் இடநெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஒரு வழி கிடைக்கும்.

கடலைத் தூர்த்து நிலமாக்கிக் கட்டடம் எழுப்புகின்றனர் !

நான் சில ஆண்டுகளுக்குமுன்பு சிங்கப்பூர் சென்றிருந்தபோது, மூன்று மைல் அளவிற்குக் கடலைத் தூர்த்து நிலமாக்கிக்கொண்டு இருந்தார்கள்; இப்போது அங்கிருந்துவந்த ஒரு நண்பரைக் கேட்டேன்—அந்த இடங்களில் கட்டடமே கட்டிவிட்டதாகக் கூறினுர்.

சென்னையில்கூட மைலாப்பூர்ப் பகுதியில் உப்பங்கழிகளைத் தூர்த்து வீடுகள் கட்டியிருக்கிருர்கள். கடலை நோக்கித் தரை செல்வதால், கடலுக்கு ஆபத்து இல்லை; தரையை நோக்கிக் கடல் வந்தால்தான் தரைக்கு ஆபத்து!

முயற்சி செய்தால்தான் நெருக்கடிகள் திரும் !

கட்டடங்களை யார் கட்டினுலும், அதற்கு இன்சூரன்சுக் கம்பெனிகளும், தனிப்பட்ட பாங்கிகளும் தாராளமாகக் கடனுதவி கொடுக்க வேண்டுமென விரும்புகிறேன்.

இப்படிப் பல்வேறு துறைகளிலும் முயற்சி எடுத்தால்தான் நெருக்கடிகளைத் தீர்க்கமுடியும்! ஒரே வழியில் தீர்க்கமுடியாது! அப்படியே தீர்ப்பதாக இருந்தாலும் காலதாமதம் ஆகும்!

இந்தப் பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்கப்படுகின்ற குழந்தைகள் நல்ல முறையில் வளர்க்கப்பட வேண்டுமென்று என் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்."

கே. ஏ. மதியழகன்

உணவமைச்சர் கே.ஏ. மதியழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சியில் பொறுப்பேற்ற பிறகு இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படுவது சென்னை நகர மக்கள் அனைவரும் நன்கு அறிந்ததே!

மாநகராட்சி நிறைவேற்றும் நல்ல பணிகளுக்கு, வசதியுள்ளவர்கள் பண உதவி செய்ய முன்வர வேண்டும்.

இங்கே இருக்கிற சேரிப் பகுதி பயங்கரமான நிலையில் இருக்கிறது. நம்முடைய சகோதரர்கள் மரப்பொந்து போன்ற இடங்களில் இருக்கிருர்கள். இந்த நிலை மாறுவதற்கு நம்முடைய நண்பர் சிட்டிபாபு முயற்சி எடுத்துவருவதாகக் கூறினுர். அவருடைய முயற்சி நிச்சயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. அதற்கு உறுதுணையாக இந்த வட்டார மக்கள் அவருக்கு உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

சி. சிட்டிபாபு

வட்ட நகராட்சிமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி சிட்டிபாபு பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்தக் குழந்தைகள் பராமரிப்பு நிலையம் ஏற்படுத்த 1963-ல் முயற்சி எடுக்கப்பட்டு 50 குழந்தைகளுக்கு வசதி செய்யப்பட்டது. ஓராண்டுக் காலத்தில் முதல் கட்டடம் கட்டப்பட்டது; அதைத் திறந்துவைக்க அண்ணு அவர்கள் வந்தபோது, 'குறைந்தது 100 பேருக்காவது வசதி இருந்தால் நல்லது' என்று குறிப்பிட்டார்கள். பிறகு மேல்மாடி கட்டி இப்போது 100 குழந்தைகளைப் பராமரிக்க வசதி செய்யப்பட்டு இருக்கிறது.

இந்தப் பகுதியில் உள்ள ஏழை மக்கள் கூலி வேலைக்குச் செல்லுகின்ற நேரத்தில் தங்களுடைய குழந்தைகளை வீதியோரத்தில் விட்டுச் செல்கிருர்கள்; அதற்கு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென என்னிடத்தில் இந்தப் பகுதியில் உள்ள பெரியவர் ஒருவர் ஆலோசனை சொல்லியதன்மீது அதற்காக இடம் தேடினேன்; கடைசியில் இடமும் கிடைத்து கட்டடமும் கட்டப்பட்டுத் திறப்பு விழாவும் நடைபெறுகிறது.

காலை 8 மணிக்கு இந்த நிலையத்தில் குழந்தைகளைக் கொண்டு வந்து கொடுத்தால் மாலை 5 மணிக்குத் திருப்பிக் கொடுப்பார்கள்; அதுவரையில் இங்கே குழந்தைகளைக் குளிப்பாட்டி—நல்ல உடை உடுத்தி — சத்துள்ள உணவு கொடுத்து — தாதியைப் போல இருந்து தூங்கவைத்து—இடையிலே அழுதால் விளையாட்டுச் சாமான்களையும் கொடுக்கிருர்கள்.

மூன்று வயதுக்கு மேல் ஐந்து வயதுக்குள் உள்ள குழந்தைகளை இங்கே கொண்டுவந்து கொடுக்கலாம்; அதைப் பாதுகாப்பார்கள்; அதற்குக் கட்டணம் எதுவும் இல்லை.

இந்தப் பகுதியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி வேண்டுமென்று கேட்டுவந்தேன். முன்பு இருந்த அரசு என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவில்லை; தி. மு. கழக அரசு ஏற்பட்டதும், இங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த அனுமதி கிடைத்திருக்கிறது.

சாலையோரத்தில் நடப்பவர்கள் களைப்பால் தண்ணீர் தேவைப்படும்போது குடிப்பதற்காக இங்கே பத்தாயிரம் ரூபாய்ச் செலவில் குளிர்ந்த குடிநீர் நிலையமும் இருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், டெல்லியில் உள்ள அஞ்சல்துறை அமைச்சரை அணுகி, இங்கே அஞ்சல் அலுவலகம் ஏற்படுத்த வேண்டுமெனக் கோரினேன்; அதை ஏற்றுக்கொண்டுவிட்டார்; அதற்கான இடம் தேடிக்கொண்டிருக்கிருர்கள்; இங்கே உள்ளவர்கள் வாடகைக்காவது இடம் கொடுக்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இரண்டு இடங்களில் பொது தொலைபேசி நிலையமும் ஏற்படுத்த ஏற்பாடு செய்திருக்கிறேன்.

இங்கே உள்ள குடிசை வீடுகளை மாடி வீடுகளாகக் கட்ட 35 இலட்சம் ரூபாய் திட்டம் இருக்கிறது; ஆனுல் இதுவரை நிறைவேற்றப்படவில்லை; அதற்கான முயற்சிகள் எடுத்துவருகிறேன்: ஓராண்டுக்காலத்திற்குள் அதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

'தாழ்த்தப்பட்டோர் வாழ்வு மலர வழி செய்வோம்'

'மத்திய அரசு செய்ததைவிடப் பன்மடங்கு நன்மைகளைப்புரிவோம்'

அமைச்சர் கே. ஏ. மதியழகன் விளக்கம்

கடலூர், பிப். 5—

"ஏழைகளும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ்க்கையில் உயர்வு கண்டால்தான் சமுதாயம் உயரும்; ஆகவே, எந்தவகையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரத்தையும் கல்வியறிவையும் உயர்த்த முடியும் என்பதைத் தமிழக அரசு ஆய்வு செய்து தகுந்த உதவி செய்யும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் இங்கு உறுதி கூறினுர்.

தமிழக அரசு தாழ்த்தப்பட்டோர் நலத் துறை சார்பில் தாழ்த்தப்பட்டோர் வார விழாவும், தாழ்த்தப்பட்டோருக்கு இலவசமாகத் தொழில் கருவிகள்வழங்கும் விழாவும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜே. எஸ். பாங்கோ தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., இராசாங்கம் எம்.எல்.ஏ., பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"முதலமைச்சர் அண்ணு தலைமையில் அமைந்துள்ள தி. மு. கழக அமைச்சரவை, தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும்; பழைய அரசு, தாழ்த்தப்பட்டுள்ள மக்களுக்குச் செய்துள்ள உதவியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகவே தி. மு. கழக அரசு உதவி புரியும்.

"சுயமரியாதை இயக்கத்தினரும், திராவிட இயக்கத்தினரும், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டுள்ள மக்கள் ஊரின் நடுவே வரவும் கோயில்களுக்குள் நுழையவும் — இழந்த உரிமைகளை மீண்டும் பெறவும் பிரசசாரம் செய்தவர்களாவார்கள் -- பாடுபட்டு வந்தவர்களாவார்கள் என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

"சமுதாயத்தில் அழுந்திக் கிடக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரிசாகக் கிடக்கும் நிலங்களை 'சர்வே' செய்து கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். கடந்த மாதம்கூட, விருத்தாசலத்தில் 300-பேர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளோம்.

"தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இலவசமாக நிலம் வழங்கப்படும்; அதன்மூலம் அவர்களின் வாழ்வுத் தகுதி உயர்த்தப்படும்.

"ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற வேறுபாடு இல்லாத சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கத் தி. மு. கழக அரசு எல்லாவித வாய்ப்புக்களும் வழங்கி ஒத்துழைப்பதாக இருக்கும்."

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அமைச்சர் தொழிற் கருவிகளை இலவசமாக வழங்கினுர்.

பின்னர், கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அதிகாரி பொன்னுசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினுர்.

கைவிடப்பட்ட பயிற்சித் திட்டம்

மீண்டும் செயல்படும்

புதுடில்லி, பிப். 6—

குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகளின் தேவையை முன்னிட்டு, 1969—70-ம் ஆண்டு வாக்கில் 75,000 ஆயாக்களுக்குப் பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது வகுக்கப்பட்டுள்ள திட்டப்படி நடப்பு நிதி ஆண்டில் 10,000 ஆயாக்களுக்கும், அடுத்த ஆண்டு 25,000 ஆயாக்களுக்கும், 1969—70-ல் 40,000 பேர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

தத்தம் மாநிலங்களுக்கான திட்டங்களை வகுக்கும்படி மத்திய அரசு, மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இப்பயிற்சித் திட்டம் துவக்கப்பட்டது; இரண்டாவது திட்டக் காலத்தில் 14,532 ஆயாக்களுக்கும், மூன்ருவது திட்டக் காலத்தில் 10,142 ஆயாக்களுக்கும் குடும்பக் கட்டுப்பாட்டுச் சம்பந்தமாகப் பயிற்சி அளிக்கப்பட்டது.

---

20 ஆண்டுகளுக்குபின் முதன் முறையாக.....!

கொழும்பு, பிப். 5—

இலங்கை விடுதலை பெற்ற 20 ஆண்டுகளில் முதன் முறையாகத் தமிழ்ப் பகுதியான திரிகோணமலையில் சுதந்தர நாள் விழா கொண்டாடப்பட்டது.

தமிழ்ப் பகுதியில் இதுவரை எந்த அரசும், சுதந்தர விழாவினைக் ஏற்பாடு செய்ததில்லை.

தமிழ்ப் பகுதிகளில் சுதந்தரத் தின விழாவிற்கு மாருகக் கறுப்புக் கொடி நிகழ்ச்சிகளும், துக்க தினமும்தான் இதற்குமுன் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்த ஆண்டு சுதந்தரத் தின விழாவிற்குத் தமிழர்கள், இலங்கை அரசுக்கு முழு ஒத்துழைப்புத் தந்திருக்கிருர்கள்.

தென்னக எஃகு தொழில்களில் முதலீடு செய்ய டில்லி தயக்கம்!

புதுடில்லி, பிப். 6—

மைசூர் இரும்பு மற்றும் எஃகுத் தொழிலுக்கான முதலீட்டில் சமபங்கு ஏற்க மத்திய அரசு பின்வாங்கிவிட்டது!

இத்தொழிலில் ரூ. 2 கோடிக்கு மேல் அது முதலீடு செய்யாது என்று தெரிகிறது.

ஆனால், மைசூர் மாநில அரசு, மேற்படி தொழிலுக்கான முதலீட்டுக்கு அதிகத் தொகையை ஒதுக்கும் வகையில் மத்திய அரசு உதவியுரியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழகம் மற்றும் மைசூர் மாநிலங்களில் அரசினர் பொறுப்பில் நடைபெற்றுவரும் எஃகுக் கலப்புள்ள உலோகத் தொழில்களின் முன்னேற்றம் திருப்திகரமாக இல்லை என்று மத்திய அரசு கருதுகிறது.

தனியார் துறைகளாக இயங்கும் பல்வேறு எஃகுக் கலப்பு உலோகத் தொழில்களின் நிலைமைகளையும், நாட்டில் எஃகு கலப்பு உலோகப்பொருள்களுக்கு எந்த அளவுக்கு தேவை இருந்துவருகிறது என்பது குறித்தும் மத்திய அரசு விரைவில் ஆய்வு நடத்தும்.

சோஷலிசத்தை அமுலாக்கும் திறன் காங்கிரசுக்கு இல்லை

குல்சாரிலால் நந்தா கூறுகிறார்

ஐதராபாத், பிப். 5—

"பணத்தின் ஆதிக்கம் நாட்டிலுள்ள எல்லாத் துறைகளிலும் இருந்துவருகிற வரையில், உண்மையான சுதந்தரம் நாட்டில் இருக்கமுடியாது"

என்று முன்னாள் உள்துறை அமைச்சர் குல்சாரிலால் நந்தா, இங்கு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"பணத்தின் கைப்பாவையாக அரசியல் தற்போது இருக்கிறது.

"தற்போது உருவாக்கப்பட்டிருக்கின்ற சோஷலிசத் திட்டத்தை அமுல் செய்யக்கூடிய திறன் படைத்ததாகக் காங்கிரசுக் கட்சி இன்று இல்லை."

தென்னக இரயில் தொடரை மட்டும் நீக்குவானேன்?

வருமானமற்ற வடக்குப் பகுதி இரயில் தொடருக்கு மட்டும் விதிவிலக்கு ஏன்?

"போதிய வருவாய் கிடைப்பதில்லை என்று காரணம் கூறி, மேட்டுப்பாளையம் — உதகை இரயில் பாதையை எடுத்து விடப் போவதாக இரயில்வே போர்டு கூறியுள்ளது.

"வடநாட்டில், கால்கா—சிம்லா, ஜல்பாய்குரி — டார்ஜிலிங் மலைப் பகுதி இரயில் தொடர்கள்கூடப் போதிய வருமானம் தருவதில்லைதான்; இருந்தாலும், அவற்றை அப்படியே விட்டுவிட்டு, தென்னாட்டிலுள்ள நீலகிரி இரயில் தொடரை மட்டும் நீக்குவானேன்?"

என்று பெங்களூரைச் சேர்ந்த வி. டி. சீனிவாசன் என்பவர், 'டெக்கான் ஹெரால்டு' நாளேட்டில் எழுதியிருக்கிறார்.

'காஷ்மீரின் குரல்' ஓய்ந்து விட்டது!

1965-ல் பாகிஸ்தான் காஷ்மீரில் ஊடுருவல் செய்தது முதல், 'காஷ்மீர் குரல்' என்ற பெயரில் ஒரு வானொலி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள ஆஜாத் காஷ்மீர் தரப்பிலிருந்து செய்திகளை ஒலி பரப்பி வந்தது.

சிற்றலை வரிசையில் கேட்கப் பட்டுவந்த இந்த 'ஒலிபரப்பினை கடந்த சில நாட்களாகக் கேட்க முடியவில்லை. துவக்கத்தில் இந்தியாவுக்கு எதிராக மிகச் சுறுசுறுப்பாகப் பிரச்சாரம் செய்துவந்த 'காஷ்மீரின் குரல்' இப்போதெல்லாம் முறையாக நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதில்லை.

நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது—அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.

சரியான 'பாக்கிங்' முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.

அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்பநிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்ற வசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த 'பாக்கிங்' முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி 'பாக்' செய்தால் இப் பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை.

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிறார்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளை சிபாரிசு செய்வது. உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகரடின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த 'பாக்கிங்'முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றாக் குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில் சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB
மெட்டல் பாக்ஸ்
பாதுகாப்பான பாக்கிங்

காலத்திற்கேற்பக் கூட்டுறவுத்துறை

மக்களுக்குப் பயன்படும் வகையில் சீரமைக்கப்பட வேண்டும்

முதலமைச்சர் அறிஞர் அண்ணா விளக்கம்

காஞ்சிபுரம், பிப். 6—

"கட்டிடத்தைத் தாங்கிடத் தூண்கள் தேவை; அந்தத் தூண்களும் போதுமான அளவு பருமனுடன் இருந்தால், கட்டடத்திற்கும் பலம்—பார்ப்பதற்கும் அழகாக இருக்கும்!

"அவ்விதம் இல்லாமல், 'தூண்கள் வேண்டும் என்பதற்காக, சாதாரண அளவைவிடப் பத்து - இருபது மடங்கு அளவில் தூண்களை நிறுத்தினால், கட்டடத்தின் அழகும் போய்விடும்—இடமும் இருக்காது!

"அதுபோல, கூட்டுறவுத் துறையில் அரசினர் பணமும், மக்கள் பணமும் இருக்கிறது என்பதற்காகச் சிலரைப் பொறுப்பில் விட்டால், அவர்கள், நாம் கூறிய அழகிய -- சிறிய -- பலமுள்ள தூண்களாகவே இருக்க வேண்டும்; ஆனால், சில இடங்களில் தூண் இருக்கிற அளவுக்குக் கட்டடம் இல்லை!

"இந்த முறையை நீக்குவதில் நாம் பெறுகிற வெற்றியைப் பொறுத்துத்தான் கூட்டுறவு இயக்கத்தின் வெற்றியே இருக்கிறது!

"நகர பாங்கிகள் மூலம் கிராம மக்களுக்குப் பணம் உதவச் சட்டத்தில் இடமில்லை; பாங்கிகள் ஒரு சிலர் கையில் அகப்பட்டுக்கொண்டு—ஒரு சிலர் நன்மைக்காக மட்டும் இருக்கக்கூடாது; பாங்கிகளினால், ஏழை—எளிய மக்களும் பயனடைய வேண்டும்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு டவுன் பாங்கிக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் விளக்கினார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"கூட்டுறவுத்துறை நல்லமுறையில் விரிந்து பரந்து செயல்படுவது, நமது நாட்டிலேயே மராட்டியத்திற்கு அடுத்தபடியாகத் தமிழகம்தான் என்று நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அத்தகைய சிறப்பை நாம் பெற்றிருந்தாலும், 'ஏழைமக்களுக்குப் பயன் தரத்தக்க அளவில் கூட்டுறவுத்துறை வளரவில்லை' என்று தமிழக அரசு கருதுகிறது.

தமிழக அரசு மட்டுமல்ல—மத்தியக் கூட்டுறவுத் துறை அமைச்சர் செகசீவன் ராமும் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்;—'ஒரு சிலரின் பிடியில் கூட்டுறவுத்துறை சிக்கிவிடக்கூடாது; ஏழை எளியவர்களுக்குப் பயன்படும்வகையில் சட்ட திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும்' என்று அவர் கூறிவருகிறார்.

அவர் அளிக்கும் உற்சாகத்தின் அடிப்படையில் கூட்டுறவுத் துறையை வலிவுள்ளதாக்கி அந்த வலிவை மக்களுக்குப் பயனுள்ளதாக்கிடும் பணியில் ஈடுபடவிருக்கிறோம்.

அக்கறையோடு கூட்டுறவுத் தலைவர்கள் பாடுபடுகிறார்கள்—மறுக்கவில்லை; ஆனால், அந்தக் கூட்டுறவுத் துறை மேலும் பரவலாக்கப்பட வேண்டும்; அதற்கேற்றபடி சட்ட திட்டம் திருத்தப்பட வேண்டும்.

இப்போதுள்ள சட்டத் திடடம், பழங்காலத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும்; இந்தக் காலத்தின் தேவைக்கேற்ப அவற்றை மாற்ற வேண்டும்.

18-வது நூற்றாண்டிலிருந்த கோச் வண்டிக்குக் கிண்டி ரேஸ் குதிரையைப் பூட்டி ஓட்டினால், 'வண்டிக்குச் சேதமா? குதிரைக்குச் சேதமா?' என்ற நிலைதான் ஏற்படும்; ஆகவே, இக்காலத்தின் தேவைக்கேற்ப கூட்டுறவுத் துறையின் சட்டத் திட்டங்கள் மாற்றப்பட வேண்டும்.

இந்தச் சங்கத்தின் தலைவர் எனது கட்சியைச் சாராதவர் என்றாலும், அவர், 'இச்சங்கத்தின் தலைவராக நீடிக்க வேண்டும்' என்று நான் விரும்பினேன்; ஏனெனில், அரசை நடத்துகின்ற கட்சிகள் மாறலாம்—மாறவேண்டும்; அப்படி மாறவேண்டும் என்பதற்காகத்தான் சனநாயக முறையையே நாம் ஏற்றுக்கொண்டோம்; ஆனால் சனநாயகக் கட்சிகள்தான் மாற வேண்டுமேயல்லாது, நல்லவர்களின் கீழ் நல்ல பணியாற்றும் அமைப்புக்கள் அனைத்துமே தலைகீழாக மாறிடவேண்டும் என்பது எங்கள் கருத்தல்ல! நல்லவர்களின் நற்பணி என்றும்போல் தொடர்ந்து நடைபெறவே நாங்கள் பதவிக்கு வந்திருக்கிறோம்!"

க. அன்பழகன்

நிகழ்ச்சிகள்

பிப். 7: அரூர், கடப்பூர்; 8: பாப்பாரப்பட்டி, தருமபுரி; 9: கிருஷ்ணகிரி—திருமணம், ஆசிரியர் கூட்டணி, தமிழ் இலக்கிய மன்றம் ஆகியவைகளின் நிகழ்ச்சிகள்; 10: சென்னை; 11: டெல்லி புறப்பாடு.

வங்கச் சட்டமன்றத்தில் ஆளுநர் உரை

பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை

கல்கத்தா, பிப். 6—

வருகிற 14-ந் தேதி கூடவிருக்கும் வங்கச் சட்டமன்றக் கூட்டுக் கூட்டத்தில், வங்க மாநில ஆளுநர் தர்மவீரா உரை நிகழ்த்துவார் எனத் தெரிகிறது.

இக்கூட்டுக் கூட்டத்திற்குப் பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வங்கச் சட்டமன்றப் பேரவைத் தலைவர்—மேலவைத் தலைவர் ஆகிய இருவரும் சட்டமன்ற அறையில் கூடி இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

ஆளுநர் உரை நிகழ்த்தவிருக்கும் கூட்டுக் கூட்டத்திற்கு முறைப்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ள செய்தியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிகிறது.

பீகாரில் அமைந்துள்ள புதிய அமைச்சரவை

37-பேரில் 3-பேர் சாதுக்கள்!

பாட்னா, பிப். 6—

பீகார் மாநில அமைச்சரவை கவிழ்க்கப்பட்டு சோஷித் தளத்தைச் சேர்ந்த மண்டல் தலைமையில் புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சரவையைச் சேர்ந்த 29 அமைச்சர்களும் பதவியேற்றனர்.

பதவியேற்ற அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் ஆகிய இவர்களோடு மண்டல் அமைச்சரவையின் எண்ணிக்கை 37-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இவர்களில் 3-பேர் சாதுக்கள்; இந்த மூவரும் சாதுக்கள் உடையிலேயே பதவியேற்றனர்.

மேலும் 10 அல்லது 15-பேர்களுக்கு அமைச்சரவையில் இடம்பெறுவர் என்றும் கூறப்படுகிறது.

தரம் உயர்ந்து பயனில்லை

விலை குறைந்தும் இருக்கவேண்டும்

அனைத்து நாட்டுச் சந்தையில் தமிழகப் பொருள்கள் போட்டியிட வழி

கருத்தரங்கில் அமைச்சர் நெடுஞ்செழியன் ஆய்வுரை

சென்னை, பிப். 6—

"அனைத்து நாட்டுச் சந்தையில் வெற்றிகரமாகப் போட்டியிடுவதற்குப் பொருள்களின் தரம் மாத்திரம் நன்றாக இருந்தால் போதாது; அத்துடன், சாமான்களின் விலைகளும் மலிவாக இருக்கவேண்டும். அதற்காக, மற்ற நாடுகளின் வியாபாரத்தைப் பாதிக்கும் முறையில் பொருள்களின் விலையை மிகவும் குறைக்க வேண்டும் என்பதில்லை.

"உலகச் சந்தையில் போட்டிப் பலமாக இருக்கிறது; ஆகவே, குறைந்த செலவில் பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை மலிவான விலைக்குக் கொடுத்தால் தான் வியாபாரம் செழிக்க இயலும்"

என்று, தமிழகத் தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இங்கு ஒரு கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கருத்தறிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"நமது உற்பத்தி முறைகள் காலத்திற்கேற்ப இல்லை என்று நாம் கவலையுறவேண்டியதில்லை; நாம் புதிய உற்பத்தி முறைகளைக் கண்டுபிடித்து உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும்; மொத்தத்தில் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும். இந்தவகையில் இந்தக் கருத்தரங்கு மிகவும்பயனுள்ளதாகும்.

பொருள்களைத் திட்டமிட்டபடி சரியாக உற்பத்தி செய்வதற்கு அச்சு வார்ப்படம் செய்வது மிகவும் முக்கியமானது. பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள்கூட அச்சு வார்ப்பட முறைகளைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளன.

'கைநுட்பத் தொழில்கள் பின்பற்றப்பட்டுவரும் நாட்டில், அச்சு வார்ப்படம் மூலமாகப் பெருவாரியாகப் பொருள்களை உற்பத்தி செய்வது பொருந்துமா?" என்று கேட்கலாம். கைநுட்பத் தொழில் மூலமாக அழகான பொருள்களைத் தயாரிப்பது நம் நாட்டில் வழக்கம்; ஆனால் காலம் மாறிவிட்டது!

வழக்கமான கைநுட்பத் திறனைத் தியாகம் செய்யாமல், காலத்திற்கேற்ற மாறுதல்களை நாம் ஏற்றுக்கொள்ளலாம். அச்சு வார்ப்படத் தொழிலிலும் கைநுட்பத் திறனைக் காட்டுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

ஆசியாவிலேயே உயர்தரமுள்ள எண்ணெய்

தஞ்சை மாவட்டத்தில் கண்டுபிடிப்பு

காவிரிப்படுகை எண்ணெய் வள ஆய்வு தரும் நம்பிக்கை

காரைக்கால், பிப். 6—

நன்னிலம் வட்டத்தைச் சேர்ந்த மருங்கூரில் எண்ணெய் ஊற்று கண்டுபிடிக்கப்படலாம்.

அங்கு எண்ணெய் ஊற்று கண்டுபிடிப்பதற்காகத் தரையைத் தோண்டும் வேலை ஆரம்பமாகிவிட்டது.

காரைக்குடியிலும், மேலும் இரு இடங்களிலும் விரைவில் எண்ணெய் தோண்டும் வேலை ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

இதுவரையில் நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, கும்பகோணம், கந்தர்வக்கோட்டை, தஞ்சை முதலிய இடங்களில் எண்ணெய் வெட்டி எடுக்கும் வேலை நடைபெற்றிருக்கிறது.

நாகப்பட்டினத்தில் இதுவரை 4000 மீட்டர் ஆழம் தோண்டப்பட்டுள்ளது; அங்கும், திருத்துறைப்பூண்டியிலும் எண்ணெய் உற்பத்தி சோதனை நடைபெற்று வருகிறது.

காரைக்காலில் திட்டச்சேரியில் உள்ள 1-ஆம் இலக்க ஊற்றில் எடுக்கப்பட்ட எண்ணெய், ஆசியாவிலேயே மிகச் சிறந்தது. ஆனால் அங்கு வியாபாரத்திற்குப் போதுமான எண்ணெய் கிடைக்கவில்லை!

கோ. மலையாட்டிப்பட்டணத்தில் கலை நிகழ்ச்சி

கோ. மலையாண்டிபட்டணத்தில் 18—1—68 அன்று கே. கே. வேலு தலைமையில் சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெற்றது; அதுபோது, நாடாளுமன்ற உறுப்பினர் சி. டி. தண்டபாணி கலந்துகொண்டு, கிளைக் கழகச் செயலாளர் கலைவாணனுக்கு ரூ. 1,001 உதவி நிதியாக வழங்கினார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

7--2--68

சென்னை

'ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் எம்ப்ளாயீஸ் அண்டு ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன்' சார்பில் இரவு 10 மணிக்கு போக்குவரத்து இல்லக் கலையரங்கில் (பாடிகார்டு சாலை); தலைவர்: எஸ். இராவணந்தம் எம்.சி.; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, மற்றும் பலர்.

ஆவடி

மக்கள் மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு காமராசர் நெடுஞ் சாலையில்; தலைவர்: இராமதாசு; பேசுவோர்: அமைச்சர் மா. முத்துசாமி, பி. சிவசங்கரன் எம்.பி., இராசரத்தினம் எம்.எல்.ஏ., பி. சின்னச்சாமி, என்.வி.என். சோமு, நாவளவன் பி.எஸ்.சி., சேத் முகைதீன், மா. இலக்குமணன்.

ஈரோடு

13-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு சூரம்பட்டி நால்ரோடில்; தலைவர்: பெ. அய்யாவு; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., மு. சின்னசாமி எம்.எல்.ஏ., ப. ச. விசுவநாதன், ஈ. ஆர். குமாரசாமி, மா. சுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்., செ. அரங்கராசன் எம்.சி., எஸ். கே. பாலுசாமி, எம். இராமசாமி.

அரூர்

நகர தி.மு.க. — எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு வாணொலித் திடலில்; தலைவர்: எச். எல். முருகேசன்; பேசுவோர்: பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ.எம்.பி., அரூர் முத்து எம்.பி., மா. வெ. கரிவேங்கடம் பி.ஏ.பி.எல்., கு. மதிவாணன், எச். ஜி. சென்றாயன், ந. தனபால், எம். ஆர். குசலன், அ. மா. தண்டாயுதம், எம். ஏ. விட்டல்நாதன், எச். ஜி. ஆறுமுகம்.

அம்பத்தூர்

செந்தமிழ்ப் படிப்பகத்தின் சார்பில் இரவு 7 மணிக்கு ஸ்டேசன் ரோடில்; தலைவர்: கோ. சேசாசலம்; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., எம். கோபால் எம்.எல்.ஏ., தே. சுதர்சனம், கிள்ளிவளவன், ஏ. பி. லோகநாதன், சாம்பசிவம்.

8--2--68

சிவகாசி

அறிஞர் அண்ணா மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: கே. ஏ. குருசாமி; பேசுவோர்: எஸ். முத்து எம்.எல்.சி., ஆர். கே. சாந்துலால், மற்றும் பலர்.

ஈரோடு வட்ட தி.மு.க. தோழர்கட்கு:

"7—2—68 காலை 10 மணியளவில், ஈரோடு நகர தி.மு. கழக அலுவலகத்தில், வட்டக் கழக அவசரக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, கீழ்பவானி விவசாயிகள் பிரச்சினை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்; நாடாளுமன்ற உறுப்பினர் பி. ஏ. சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் மு. சின்னசாமி ஆகியோரும் கலந்துகொள்வர்; கிளைக் கழகச் செயலாளர்களும், வட்டப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று அன்பரசு அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.